[1994 நவம்பர் 9

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து.

**திரு. சி. ஞானசேகரன்:** ஸ்பீக்கர், சார் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உங்களுடையது ஒன்றும் இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** பல நாட்களாகக் கேட்கிறேன் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) இன்றைக்கு வேறு பிரச்சினையை எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு.

### (அ) செங்கல்பட்டு தாலுகா காரணை கிராமத்தில் அம்பேத்கார் சிலை அகற்றப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட சம்பவம் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செங்கல்பட்டு தாலுகா காரணை கிராமத்தில் அம்பேத்கார் சிலை அகற்றப்பட்ட ஒரு சம்பவத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்ச்சி குறித்து பேரவையில் எழுப்பி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்று திரு. போளூர் வரதன் ஒரு அறிவிப்பைக் கொடுத்து இருக்கிறார். அந்தப் பிரச்சினையை மட்டும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிற விதத்தில் எழுப்ப அனுமதிக்கிறேன். திரு. போளூர் வரதன்.

**திரு. போளூர் வரதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் 10ஆம் தேதி செங்கல்பட்டிலே காவல் துறையினரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு 2 தாழ்த்தப்பட்டவர்கள் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். அதற்குக் காரணம் செங்கல்பட்டு தாலுகா காரணை கிராமத்திலே 1933ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டு இருக்கின்ற பஞ்சம நில சம்பந்தமான பிரச்சினைகள் பல ஆண்டுகாலமாக அரசின் பல்வேறு கவனங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, இறுதியிலே அந்த நிலம் சில அதிகார வர்க்கத்திற்கு உட்பட்டவர்களாலும் பணம் படைத்தவர்களாலும் பறிக்கப்பட்டு, அது நிலுவையில் இருந்ததன் காரணமாக, 1969-ல் அந்த